# தீர்மானம்

ஹாய் ஃ ப்ரெண்ட்ஸ் !

வாலிபரின் வழிகாட்டியாம் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் யாவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். அக்கினி மலர் வாலிபர் பகுதியின் மூலமாய் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த பகுதி உங்கள் வாழ்க்கைக்கு பிரயோஜனமாக இருக்கும் என்று கர்த்தருக்குள் நம்புகிறேன்.

சுந்தரும், குமாரும் சிறுவயதிலிருந்தே நல்ல நண்பர்கள். ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள். தற்போது கல்லூரியிலும் ஒன்றாக படித்து வருகிறார்கள். இருவரும் கிறிஸ்தவ குடும்பத்தை சார்ந்தவர்களாகையால் ஒன்றாக ஆலயத்துக்கு செல்வது வழக்கம். குமாருக்கு புகை பிடிக்கும் பழக்கம் இருந்தது. அவன் ஒரு Chain Smoker. இந்த பழக்கத்திற்காக சுந்தர் அவனை அடிக்கடி கடிந்து கொள்வான். "டேய்! சிகரெட் குடிப்பது உடம்புக்கு கேடுடா! விட்டுருடா!" இது குமாரின் காதில் அடிக்கடி விழும் சுந்தரின் அறிவுரைகள்.

ஒருமுறை புதிய வருட ஆராதனைக்கு இருவரும் ஆலயத்திற்கு ஒன்றாக சென்றார்கள். பழைய வருட ஸ்தோத்திர ஆராதனை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது சரியாக 11.50 மணிக்கு குமார் ஆலயத்தை விட்டு வெளியே சென்றான். பின்னர் சிறிது நேரம் கழித்து ஆராதனையில் இணைந்து கொண்டான். சுந்தரும் தனது நண்பன் எதற்கோ வெளியே செல்கிறான் என்று விட்டு விட்டான். அடுத்த வருடமும் இதே சம்பவம் நடைபெற்றது. உடனே சுந்தரும் தனது நண்பன் என்ன செய்கிறான் என்று பார்க்க வெளியே எழுந்து சென்றான். வெளியே அவன் கண்ட காட்சி அவனை வேதனைப்படுத்தியது. என்ன நடந்தது தெரியுமா? அங்கே குமார் சிகரெட் குடித்துக் கொண்டிருந்தான். சுந்தர் கோபத்தோடு "என்னடா இது? வருஷா வருஷம் New Year Service க்கு முன்னால் இப்படி சிகரெட் குடித்துக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டான். அதற்கு சுந்தர் : "மாப்ள என்னோட Life ல இது தான் கடைசி கிகரெட். இனிமே நான் சிகரெட் குடிக்கவே மாட்டேன்னு தீர்மானம் பண்ணிருக்கேன்டா" என்று சொன்னான்.

என்ன ஃபிரெண்ட்ஸ்! நான் சொல்ல வருகிறது என்னன்னு உங்களுக்கு புரிஞ்சிருக்கும்னு நினைக்கிறேன். ஆம் குமார் வருஷா வருஷம் தீர்மானம் பண்ணுகிறான். ஆனால் அவனால் அவன் எடுத்த தீர்மானத்தில் நிலைத்து நிற்க முடியவில்லை.

அன்பான வாலிபரே! நங்கையரே! உங்களுடைய வாழ்க்கையிலும் ஆண்டவருக்கு பிரியமில்லாத பாவ செயல்களிலிருந்து விடுபட தீர்மானங்கள் எடுத்திருப்பீர்கள் என நம்புகிறேன். ஆவிக்குரிய கூட்டங்களிலோ, வாலிபர் முகாம்களிலோ பாவத்தை கண்டித்து உணர்த்தும் உபதேசங்களை கேட்டு அந்த பாவத்திலிருந்து விடுபட இனி இந்த செயலை செய்ய மாட்டேன், இனி இப்படிப்பட்ட வாழ்க்கை வாழ மாட்டேன், இத்துடன் இந்தப் பாவத்தை நிறுத்திக் கொள்வேன் என்று பல முறை தீர்மானித்திருக் கிறீர்கள் இல்லையா? அப்படியென் றால் எந்த அளவு அந்த தீர்மானங் களில் நிலைத்திருக்கிறீர்கள்? என்ற கேள்வியை உங்கள் மத்தியில் வைக்கிறேன். சிந்தித்துப் பாருங்கள். பலமுறை தீர்மானத்தை நிறைவேற்ற தவறியிருக்கிறீர்கள் அல்லவா?

அன்பு நண்பர்களே! தீர்மானம் எடுப்பது என்பது எளிது. ஆனால் அதை நிறைவேற்றுவது என்பது கடினமான காரியம். ஆனால் அந்த கடினமான செயலைத்தான் ஆண்டவர் நம்மில் எதிர்பார்க்கிறார்.

தானியேல் என்கின்ற வாலிபனும் பாபிலோன் தேசத்து அரண்மனையிலே இருந்த போது, ஒரு தீர்மானம் பண்ணினான். என்ன தீர்மானம் அது? ராஜாவின் போஜனத்தினாலும் அவர் பானம் பண்ணும் திராட்சை ரசத்தினாலும் தன்னை தீட்டுப்படுத்தக் கூடாது என்பதே (தானியேல் 1:8). அந்த தீர்மானத்தில் அவன் வெற்றி பெற்றானா? என்று பார்ப்போமானால் நிச்சயமாக அவன் தீர்மானத்தை நிறைவேற்றினான் என்று சொல்லலாம். தன்னை தீட்டுப் படுத்துகிற அந்த உணவு வகைகள் தனக்கு வேண்டாம் என்று தைரியமாய் பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டிக் கொண்டான். (வசனம் 8b)

ஆம் பிரியமானவர்களே தானியேல் தீர்மானித்தது மட்டு மல்லாமல், அந்த தீர்மானத்தை நிறைவேற்றுவதில் மும்முரமாக இருந்தான். கர்த்தரின் பெலன் கொண்டு தைரியமாய் தலைவனிடத்தில் பேசினான். முடிவு? தனது தீர்மானத்தை நிறைவேற்றி வெற்றியும் பெற்றான் (வசனம் -16).

சகோதர சகோதரிகளே! நம்முடைய வாழ்க்கையிலும் தானியேலைப் போல தீர்மானத்தை காத்துக் கொள்ள பிரயாசப்பட வேண்டும். சுய பெலத்தைக் கொண்டு நாம் முயற்சி செய்தால் நிச்சயமாக தோற்றுப் போவோம். ஆனால் பரிசுத்த ஆவியானவரின் பெலன் கொண்டு நாம் தீர்மானிக்கும் போது நிச்சயமாக தீர்மானத்தை காத்துக் கொள்வோம் என்பதில் ஐயமில்லை. எனவே நாம் நம்முடைய வாழ்க்கையில் தீர்மானம் எடுக்கும் போது பரிசுத்த ஆவியானவர் நம்மை பெலப்படுத்தும் படியாக ஜெபிப்போம். அவர் தரும் பெலத்தோடு தீர்மானங்களை நிறைவேற்றுவோம், வெற்றியுள்ள வாழ்க்கை வாழ்வோம்.

**"தீர்மானங்கள் தோற்கா வண்ணம் காத்துக் கொள்ள உதவும். நேர்மையாக வாழ்க்கைக் காக்க வழி வகுத்தருள வேண்டும்"**

# பயமா? எனக்கா...?

ஹாய் ஃப்ரெண்ட்ஸ் !

வாலிபரின் நண்பராம் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். இந்த மாத வாலிபர் பகுதியின் மூலமாக மறுபடியும் உங்களை சந்திப்பது மிகுந்த மகிழ்ச்சி. கடந்த மாதத்தில் நாம் தியானித்தபடி தீர்மானங்களில் தோற்காதபடி தேவபெலத்துடன் முயற்சி செய்கிறீர்கள் என கர்த்தருக்குள் நம்புகிறேன். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

1911ம் ஆண்டு ஜூலை மாதம் பேப்பி லீச் (Pappy Leech) என்கிற வாலிபன் நயாகரா நீர்வீழ்ச்சியின் மேல் கயிற்றை கட்டி, கயிற்றின்மேல் ஒரு பீப்பாயின் உதவியுடன் ஒரு முனையிலிருந்து மறு முனைக்கு நீர்வீழ்ச்சியின் பயரங்கரமான இறைச்சல்களின் மத்தியிலும், பார்வையாளர்களின் ஆரவாரத்தின் மத்தியிலும் பயமில்லாமல் கடந்து சென்று சாதனை படைத்தான். அவனது சாதிக்கத் தூண்டும் இளமையின் காரணத்தால் விபத்தை குறித்தோ, மரணத்தை குறித்தோ எள்ளளவும் அவனுக்கு பயமில்லை. ஆனால் அதே வாலிபன் நியூ ஜெலன்ட் (New Jelant) பட்டணத்தின் தெருவில் நடந்து போகும் போது ஆரஞ்சு பழ தோல் வழுக்கி கீழே விழுந்தான். அந்த நாள் முதல் அவனது எதிர்காலத்தை குறித்த பயனம் அவனை ஆட்கொண்டது.

ஃப்ரெண்ட்ஸ் இதை எதற்காக சொல்லுகிறேன் என்றால், வாலிபப் பருவத்தை பயமற்ற பருவம் என்று சொல்லாம். இது ஒரு தைரியம் நிறைந்த பருவம் எதையும் பொருட்படுத்தாமல் சாதிக்கத் தூண்டும் பருவம். இது இரு பாலருக்கும் பொருந்தக்கூடிய ஒரு உண்மை. எதைக்குறித்தும் பயமில்லாத வாலிப சகோதர சகோதரிகள் மிகவும் பயப்படுகிற ஒரு காரியமும் உண்டு. அது என்ன? என்று கேட்டால் எதிர்கால வாழ்க்கையை குறித்த பயம் என்று சொல்லலாம். ஆம் எல்லா வாலிப சகோதர சகோதரிகளுக்கும் தங்கள் எதிர்கால வாழ்க்கை எப்படி இருக்குமோ? என்கிற ஒரு பயமும், கலக்கமும் இருக்கிறது. என்ன ப்ரெண்ட்ஸ் நான் சொல்றது சரிதானே?

நமது வாழ்க்கையில் பயம் என்பது ஒரு தீயசக்தி, வாலிபர்களின் இருதயத்தை சோர்ந்து போகப்பண்ணுகிற சாத்தானின் கொடிய ஆயுதம். எதிர்காலத்தைக் குறித்த பயமும், கலக்கமும், அதிகரிக்கும் போது அநேக வாலிபர்கள் தங்களது விலைமதிப்பில்லாத வாழ்க்கையை தற்கொலையின் மூலமாக முடித்துக் கொள்ளுகிறார்கள். பயம் நம்முடைய வாழ்க்கையிலிருந்து களையப்பட வேண்டிய ஒன்று.

இது எப்படி சாத்தியமாகும்? என்கிற கேள்வி எழும்பும் போது, ''பலங்கொண்டு திடமனதாயிரு, திகையாதே, கலங்காதே'' (யோசுவா1:9) என்கிற நமது நண்பரின் (இயேசு) குரல் நம்மை ஆறுதல் படுத்துகிறது. ஆண்டவர் நம்மோடு இருக்கும் போது நாம் எதைக் குறித்தும் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை.

ஒரு சூழ்நிலையில் பயத்துடன், பதட்டத்துடன் காணப்பட்ட ஆபிரகாமிடம் தேவன் வந்து ''பயப்படாதே'' (ஆதி.15:1) என்று கூறி அவனை திடப்படுத்தினார். மோசேயின் மரணத்தால் தலைமைப் பொறுப்பேற்கிறான் யோசுவா அவனுக்குள் சிறிய கலக்கம், திகைப்பு. ஆனால் தேவன் அவனிடம் வந்து ''திகையாதே, கலங்காதே'' என்று கூறி அவனை உற்சாகப்படுத்தினார் (யோசு.1:9). அடுத்து என்ன நடக்கப்போகிறது என்பதை அறியாத சூழ்நிலையில் கலங்கி, குழம்பிக் கொண்டிருந்த சீஷர்களை நோக்கி இயேசு ''உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக'' என்று கூறி பலப்படுத்தினார் (யோவா.14:1).

வாழ்க்கைப் பாதையில் பயப்படத்தக்க, கலங்கி தவிக்கத்தக்க சூழ்நிலைகளை நாம் சந்திக்க நேரிடுகின்ற காலங்கள் உண்டு. ஆனால் நமது நண்பராகிய இயேசு நமது பயத்தையும் கலக்கத்தையும் நீக்கி அமைதியையும், தைரியத்தையும், மனபலத்தையும் அருளுகின்றார். ஆனால் அதை எப்போது நமக்கு செய்வார் என்பதை நாம் அறிந்து கொள்வது அவசியம்.

ஆபிரகாம், யோசுவா மற்றும் சீஷர்கள் போன்ற தேவ மனிதர்கள் தங்கள் வாழ்க்கையை தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, அவருக்காக வாழ்கின்ற ஒரு வாழ்க்கை வாழ்ந்தார்கள். தேவ சித்தத்தையும், நோக்கத்தையும், விருப்பத்தையும் நிறைவேற்றுவதற்காக தங்களை பட்டயமெழுதிக் கொண்டவர்கள். எனவே தேவன் அவர்களின் இக்கட்டான நிலைகளில் அவர்களின் பயத்தை நீக்கி, கலக்கத்தை அகற்றினார்.

So ஃப்ரெண்ட்ஸ், பயப்படாதே, கலங்காதே போன்ற வேதவசனங்களை நாம் வெறுமனே படிப்பதாலோ, நினைவு கூறுவதாலோ நமது பயமும் கலக்கமும் போகாது. முதலாவது தேவனுடைய ஆளுகைக்குள் நமது வாழ்க்கை காணப்பட வேண்டும். அவருக்காக வாழ்வதே இவ்வுலக வாழ்க்கையில் நோக்கமாக இருக்க வேண்டும். நாம் கர்த்தருடைய சித்தத்தின்படி, விருப்பத்தின்படி, வாழ்வதற்கு நம்மை ஒப்புக்கொடுத்து வாழும்போது நம்முடைய எதிர்காலத்தைக் குறித்த பயத்தையும், திகைப்புகளையும், கலக்கங்களையும் அவர் நிச்சயமாக போக்குவார். அவருக்காக வாழ்கின்ற வாழ்க்கையில் எது வந்தாலும் தேவன் நம்மை கைவிடமாட்டார் என்பது உறுதி.

இப்போ எல்லோருமே சொல்லுவோமா?

பயமா...? எனக்கா.....? No way....

# தாழ்மை

ஹாய் ஃ ப்ரண்ட்ஸ் !

வாலிபரின் வழிகாட்டியாம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள் !

இந்த மாதம் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி. கடந்த மாதம் முழுவதும் நம்மை காத்த தேவனுக்கு நன்றி செலுத்துவோம்.

ஒரு அழகிய ஆற்றங்கரை அதில் ஒரு பெரிய ஆலமரமும் ஒரு சிறிய நானல் செடியும் அருகருகே இருந்தது. காற்று வீசும் போதெல்லாம் நாணல் இலேசாக வளைந்து, குணிந்து எழுந்து நிற்கும். ஆனால் ஆலமரம் கம்பீரமாக நிற்கும். நாணலைப் பார்க்கும் போது ஆலமரத்திற்கு பயங்கர பெருமை, தான் நிமிர்ந்து நிற்கிறேன் என்றும் நாணலால் தன்னைப் போல் காற்று வீசும் போது நிமிர்ந்து நிற்க முடியவில்லை என்றும்.

நாட்கள் இப்படியே கடந்தது. ஒரு நாள் ஒரு பெரிய புயல் காற்று வீசியது. வழக்கம் போல நாணல் வளைந்து, குணிந்து கிட்டத்தட்ட முகங்குப்புற நின்றது. ஆலமரம் வழக்கம் போல் கம்பீரகமாக நிமிர்ந்து நின்று காற்றை எதிர்கொண்டது. ஆனால் காற்றின் வேகமும் பலமும் அதிகரித்தபடியால், தாக்குபிடிக்க முடியாமல் ஆலமரம் சாய்ந்து தரையில் விழுந்தது. காற்று அமர்ந்த பின்னர் தரையில் கிடந்த ஆலமரம் நாணலைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தது. நாணல் வழக்கம் போல கம்பீரமாக நிமிர்ந்து நின்றது.

என்ன ப்ரண்ட்ஸ் இந்த கதையின் மூலம் என்ன சொல்லப் போறேன்று புரிஞ்சிருப்பீங்கன்னு நினைக்கிறேன்!

கரெக்ட்! வாலிபர்களாகிய நாம் நம்முடைய வாழ்க்கையில் தேவன் நம்மை உயர்த்த வேண்டுமென்று விரும்புகிறோம். தேவன் நம்முடைய வாழ்க்கையில் தலையிட்டு நம்மை உயர்த்த வேண்டுமானால் நம்மிடத்தில் கண்டிப்பாக இருக்க வேண்டிய குணம் '**தாழ்மை**'.

தேவனுக்கு முன்பாக நம்மை தாழ்த்துவது மட்டுமல்ல, மனிதர்களுக்கு முன்பாகவும் நம்மை தாழ்த்தவும் அல்லது தாழ்த்தப்பட அனுமதிக்கிறதுமான மனப்பக்குவம் நம்மிடத்தில் வரும்போது தான் தாழ்மை முழுமை அடைகின்றது. மனிதர்களுக்கு முன்பாக நாம் தாழ்ந்து போக வேண்டும் என்பது ஆண்டவரின் விருப்பம் அல்ல. ஆனால் தாழ்மை அல்லது தாழ்ந்து போகிற அனுபவத்தின் மூலமாகத்தான் தேவன் நம்மை உயர்த்தி காண்பிக்கிறார்.

அநேக செல்வங்களோடும், பரிவாரங்களுடனும் ஊர் திரும்புகிறான் யாக்கோபு. வருகின்ற வழியில் ஏசாவின் வருகையைக் கேட்டு நிலை தடுமாறி போகிறான். தேவனை நோக்கி சத்தமிடுகிறான். ஒருவேளை தேவன் தனக்கு மிகுந்த பெலனைக் கொடுத்து ஏசாவை முறியடிக்க வழி செய்வார் என அவன் எதிர்பார்த்திருக்கலாம். ஆனால் தேவன் அவனை சரியாக நடக்க விடாமல் நொண்டி நொண்டி நடக்க வைத்தார். தன்னால் எதையும் செய்ய முடியாத பலவீனனாக மாறிய யாக்கோபு ஏசாவின் முன் ஏழு தடவை தரைமட்டும் குனிந்து வணங்கினான் (ஆதியாகமம் 33:3). அந்த தாழ்மையும் பணிவும் ஏசாவின் மனதை மாற்றியது. தேவன் தாழ்மையின் மூலம் அவனை தப்பிக்க வைத்தார்.

**ஒன்றையும் வாதினாலாவது வீண் பெருமையினாலாவது செய்யாமல், மனத் தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர் களாக என்னைக் கடவீர்கள்**. (பிலிப்பியர் 2:3).

நாம் தாழ்மையோடு இருந்தால் வாழ்வில் அநேக வெற்றி பெற தேவன் நமக்கு உதவி செய்கிறார். இவ்விதத் தாழ்மை தானாக வருவதில்லை. தேவன் சில சூழ்நிலைகளை நம் வாழ்வில் அனுமதித்து தாழ்மையடையச் செய்கிறார். அந்த வலிமை மிக்க ஆயுதத்தின் மூலம் எதிர்காலத்தில் பெரிய பெரிய வெற்றிகளையும் உயர்வுகளையும் பெற வழி வகுக்கிறார்.

எனவே, சகோதர, சகோதரிகளே! நாம் அற்பமாகக் கருதப்படும் போதும் தாழ்ந்து போகத்தக்க சூழ்நிலைகள் வரும்போதும் சோர்ந்து போய் மனம் கலங்கி போகாதீர்கள். தேவன் அந்த நிலைமையில் நம்மை சிறுமைப்பட்டு போக அனுமதிக்காமல் தாழ்மையில் பக்குவப்படவே அனுமதிக்கிறார். எனவே தாழ்மையாயிருப்போம்! வாழ்வில் வெற்றி பெறுவோம்! வெற்றி நிச்சயம் !

*மேன்மைக்கு முன்னானது தாழ்மை.*

# தோல்விகள் ஏன்?

*ஹாய் ஃப்ரெண்ட்ஸ் !*

*வாலிபரின் வழிகாட்டியாம் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த மாத வாலிபர் பகுதியின் மூலமாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழச்சி அடைகிறேன்.*

*கடந்த சில ஆண்டுகளாக டென்னிஸ் போட்டியில் பல வெற்றிகளைப் பெற்று, பல சாதனைகளை முறியடித்து, யாராலும் அசைக்க முடியாமல் முதல் நிலையில் விளையாடிக் கொண்டிருக்கும் சுவிட்சர்லாந்து வீரர் ரோஜர் ஃபெடரர் கடந்த சில நாட்களுக்கு முன்பாக விளையாடி வெற்றி பெற்ற அமெரிக்க ஓப்பென் டென்னிஸ் போட்டியை தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டிருந்தேன். அந்தப் போட்டியில் ரோஜர் ஒவ்வொரு ஆட்டத்திலும் வெற்றிபெற கடுமையாக போராட வேண்டியிருந்தது. முன்னணி வீரராக இருந்தாலும் பல முறை தனது புள்ளிகளை (செட்) இழந்து பயங்கர போராட்டத்திற்கு பின் வெற்றியை தக்க வைத்தார். கடந்த சில போட்டிகளில் கிரிக்கெட்டின் நட்சத்திர ஆட்டக்காரர் சச்சின் நூறு ரன்கள் எடுக்கும் முயற்சியில் பல முறை தோல்வியடைந்திருக்கிறார். கடந்த இலங்கையுடனான இறுதிப் போட்டியில் நூறு ரன்களுக்கு மேல் எடுத்து புதிய சாதனை செய்தார்.*

*என்ன ஃப்ரென்ட்ஸ் இதை எதற்காக சொல்கிறேன்னு நினைக்கிறீர்களா? ஆம் பலவித போட்டிகளின், மத்தியில் எதிர்காலத்தை கேள்விக்குரியாக வைத்து, வெற்றி அடைந்தே தீர வேண்டும் என்று முழு மூச்சாக தேவனின் ஒத்தாசையோடு ஓடிக் கொண்டிருக்கும் நமது வாழ்க்கைப் பாதையில் அநேக முறை நாம் தோல்வியையும் சந்திக்க நேரிடுகிறோம். அப்போது நாம் மிகுந்த வேதனைப் படுகிறோம். தோல்வியை கண்டு துவண்டு போய் வாழ்க்கையை நொந்து கொள்கிறோம். அப்படித்தானே?*

*தேவனை விசுவாசித்து நடக்கிறவர்களுக்கு தேவன் வெற்றிகளை தருகிறார் என்பது பொதுவான மறுக்க முடியாத உண்மை. ஆனால் தேவனைச் சார்ந்த விசுவாச ஓட்டத்திலும் சில வேளைகளில் நாம் தோல்விகளை சந்திக்க நேரிடும் என்பது இன்னொரு உண்மை.*

*யோசேப்பு எழுந்து நின்ற நேரத்தில், எதிர்பாராத விதமாக சிறைச்சாலைக்குள் தள்ளப்பட்டான். உயர் பதவி வகித்த தானியேல் பகைவர்களின் சூழ்ச்சியினால் சிங்கக் கெபிக்குள் போடப்படான். இது இவர்களுடைய வாழ்க்கையில் தோல்விகள் தான். வேதாகமத்தில் வெற்றி வீரர்களாக உயர்ந்து நிற்கும் தேவ மனிதர்கள் யாவரும் ஏதோ ஒரு சூழ்நிலையில் தோல்வியின் கசப்பையும் ருசி பார்த்தவர்கள் தான்.*

*வாழ்க்கைப் பாதையில் தோல்விகளின் வாயிலாக நாம் கற்றுக் கொள்ள வேண்டிய சில பாடங்களும், பெற்றுக் கொள்ள வேண்டிய அனுபவங்களும் உண்டு. அவைகள் தான் நாளைய வெற்றியை தாங்குகின்ற வலிமையான தூண்களாக மாறுகின்றன.*

*தாவீது தேவ கிருபையால் பல வெற்றிகளை ருசிபார்த்தவன் என்பது உண்மையாயினும், அவன் தேவ பக்தியின் பாதையில் தோல்விகளும் பல கண்டவன். அந்த தோல்விகளின் மூலம் அவன் கற்றுக் கொண்ட அனுபவ பாடங்கள் தான் வலிமையான அவனுடைய வெற்றிக்கு அஸ்திபாரமாக மாறின. உறவு நிலைகளில் தோல்வி கண்டான். நம்பிக்கையிலும், முயற்சியிலும் அவன் தோல்வி கண்டான். இவைகள் யாவும் தேவனால் அனுமதிக்கப் பட்டவைகளே.*

*நமது வாழ்க்கையில் உறவுகளில் தோல்வி, நட்பு நிலையில் தோல்வி, முயற்சிகளில் தோல்வி, எதிர்பார்ப்புகளில் தோல்வி, முன்னேற்றங்களில் தோல்வி, இலக்குகளில் தோல்வி, நம்பிக்கைகளில் தோல்வி, இது போன்று நாம் கடந்து வருகிற சில தோல்விகளை தேவன் சில சூழ்நிலைகளில் நமக்கு அனுமதிக்கிறார். ஏனென்றால் இவைகள் மூலமாகத்தான் சில ஆக்கப்பூர்வமான உண்மைகளை அனுபவப் பூர்வமான நாம் அறிகிறோம்.*

*உறவுகள் எந்த அளவிற்கு நமக்கு கைகொடுக்கும், முயற்சிகளினால் எல்லாம் சாதித்துவிட முடியுமா, தேவனை சார்ந்து வாழ்வது எந்த அளவிற்கு அவசியம், ஞானம், சுயபலம், புத்திசாலித்தனம் போன்றவை எதிர்பார்த்த விளைவுகளைத் தந்து விடுமா என்பது போன்ற கேள்விகளுக்கு இந்தத் தோல்விகள் விடைகாண உதவுகின்றது.*

*எனவே, ஃப்ரெண்ட்ஸ், தோல்விகள் நேரிடும் போது துவண்டு விடாதபடி, அனேகரின் பார்வைகளில் தோல்வியாக வீழ்ச்சியாக, பலவீனமாக காட்சியளிக்கின்ற சூழ்நிலைகள் தாம் நாம் வீரம் நிறைந்தவர்கள் என்பதையும், எழுச்சி நிறைந்த வெற்றியாளர்கள் என்பதையும் தெளிவாக நிரூபிக்கும் என்கிற நம்பிக்கையோடு, தேவனை சார்ந்து வாழுகின்ற வாழ்க்கையை விட்டுவிடாதபடி, வேதம் காட்டும் தேவ மனிதர்களை முன் மாதிரியாக வைத்துக் கொண்டு, வேதத்தை அடிப்படையாகக் கொண்டு தொடர்ந்து வாழ்க்கைப் பயணத்தை தொடர்வோம், வெற்றி மிக அருகில்தான் உள்ளது. ஆண்டவர் நம்மை வெற்றிக்கு அழைத்துச் செல்வார்.*

*All the Best .... !*

# தேவ சித்தம் செய்வோமா?

ஹாய் ஃ ப்ரெண்ட்ஸ் !

வாலிபர்களின் முன் மாதிரியாம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் யாவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். இந்த மாத வாலிபர் பகுதியின் மூலம் உங்களை சந்திப்பதிலே மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

விவசாயி ஒருவன் அநேக வாத்துகளை வளர்த்து வந்தான். அதிலே ஒரு வாத்து தினம் தோறும் தங்க முட்டைகளை இட்டு வந்தது. இதன் மூலம் அந்த விவசாயி பெரிய பணக்காரன் ஆனான். ஒரு நாள் அவனுக்குள் ஒரு எண்ணம், இந்த தங்க முட்டையிடும் வாத்தின் வயிற்றை வெட்டி பார்த்தால் அதற்குள் நியை தங்க முட்டைகள் இருக்கும். அதை எடுத்தால் ஒரே நாளில் மிகப்பெரிய கோடீஸ்வரன் ஆகிவிடலாம் என்று சிந்தித்தான். அதன்படி வாத்தை பிடித்து அதன் வயிற்றை அறுத்தான். பெரிய ஏமாற்றத்தை கண்டான். வாத்தின் வயிற்றுக்குள் அன்றைக்கு இட வேண்டிய ஒரு முட்டை மாத்திரமே இருந்தது. இப்போது வாத்தும் இறந்து விட்டது. இனி தங்க முட்டையும் இல்லை, வாத்தும் இல்லை.

ஃப்ரெண்ட்ஸ் இது நம்ம எல்லோருக்கும் நன்கு தெரிந்த ஒரு கதை. ஒரு நாளைக்கு ஒரு தங்க முட்டை என்பது தான் நடைமுறை. ஆனால் அந்த விவசாயி அதனை மறந்து தனது விருப்பத்தை நிறைவேற்ற முயற்சி செய்கிறான். ஆனால் பாவம் பெரிய ஏமாற்றம்.

கிறிஸ்துவுக்குள் பிரியமான நண்பனே! தோழியே! நமது வாழ்க்கையிலும், ஒவ்வொரு காரியத்தையும் ஆண்டவர் நமக்கென்று ஒரு சித்தத்தை, திட்டத்தை வைக்கிறார். இது யாராலும் மறுக்க முடியாத உண்மை. அந்த திட்டத்தை, சித்தத்தை நாம் உணர்ந்து அதன்படி செய்யும்போது பெரிய வெற்றியை நாம் அடைகிறோம். ஆனால் பல வேலைகளில் அந்த தேவசித்தத்தை மறந்து நமது விருப்பத்தின்படி, சுய சித்தத்தின்படி சில காரியங்களில் ஈடுபடும்போது, பெருத்த ஏமாற்றத்தையும் சில வேளைகளில் பயங்கர தோல்விகளையும் சந்திக்கிறோம்.

யோனா ஒரு தேவனுடைய ஊழியக்காரன். பவுலும் தேவ ஊழியன். ஒரு சூழ்நிலையில் யோனாவும் கப்பலில் பயணம் செய்கிறான். பவுலும் கப்பல் பயணம் செய்கிறான். இருவர் பயணம் செய்த கப்பல்களும் பெருங்காற்றினால் அலைக்களிக்கப்பட்டது. இந்த சம்பவங்கள் இரண்டு பேருடைய வாழ்க்கையிலும் நடைபெற்ற ஒற்றுமைகள். ஆனால் அந்த இக்கட்டான நிலையை சந்தித்த விதத்தில் இரண்டு பேரும் வேறுபடுகின்றனர். அத்தகைய சோதனையான வேளையில் பவுல் தேவனுடைய ஐக்கியத்தை உணர்ந்து, தேவனிடமிருந்து நம்பிக்கையான வாக்குத்தத்தைங்களை பெற்று கலங்கிய பிற கப்பல் பயணிகளையும் திடப்படுத்தினான். ஆனால் யோனா தேவ ஐக்கியத்தை இழந்து, எந்த நம்பிக்கையும் இல்லாத காரணத்தினால் மற்றவர்களுக்கு ஒரு பிரச்சனையாக மாறினான். இதற்கு என்ன காரணம்?

ஆம்! யோனா சுய சித்தத்தின் பாதையில் பயணம் செய்தான். பவுல் தேவ சித்தத்தின் பாதையில் பயணம் செய்தான். சுய சித்தத்தின் பாதையில் பயணம் செய்த யோனா கடல் கொந்தளிப்புக்கு காரணமானான். ஆனால் தேவ சித்தத்தின்படி பயணம் செய்த பவுல் அநேகரை ஆழிவிலிருந்து தப்புவித்தான்.

ஃப்ரெண்ட்ஸ்! எங்கே சுயசித்தம் மேலோங்கி நிற்குமோ, அங்கே தேவையற்ற தொந்தரவுகளும், இழப்புகளும் நேரிடும். எங்கே தேவசித்தம் மேலோங்கி நிற்குமோ அங்கே தான் வெற்றியின் கனியை சுவைக்க முடியும். நம்முடைய வாழ்க்கையில் எது மேலோங்கி நிற்கிறது தேவ சித்தமா? சுயசித்தமா? எதிர்கால திருச்சபையை, தேசத்தை கட்டிக்காக்க தயாராகிக் கொண்டிருக்கும் இந்த வாலிப நாட்களில் நீங்கள் பவுலா? அல்லது யோனாவா? யோசித்து பார்ப்போம்.

தேவ சித்தத்திற்கு வெல்கம் (Welcome) சொல்லுவோம். சுய சித்தத்திற்கு குட்பை (Good Bye) சொல்லுவோம். இறுதிவரை நிலைத்து நிற்போம். வெற்றியுள்ள வாழ்க்கை வாழ்வோம்.

# சுயநலமற்ற கிறிஸ்மஸ்

ஹலோ ஃப்ரெண்ட்ஸ் !

உலகை மீட்கும்படி மனிதனாய் உலகில் பிறந்த இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

கிறிஸ்மஸ் பண்டிகையை அமர்க்களமாக கொண்டாடும்படி எல்லாரும் ஆவலாக இருப்பீங்கன்னு நம்புகிறேன். அசத்தலா நிறைய ப்ளான்ஸ் (Plans) வச்சிருப்பீங்க. புத்தாடைகள், கேக்ஸ், பட்டாசுகள் மற்றும் கலர்ஃபுல் (Colourful) கொண்டாட்டங்களுக்கான எதிர்பார்ப்புகளோடு இருப்பீங்க.

So உங்க எல்லாருக்கும் என்னோட அட்வான்ஸ் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள்.

கிறிஸ்மஸ் என்கிற பெயரைக் கேட்டவுடனே எவ்வளவு சந்தோஷமா இருக்கிறது. என்ன ஃப்ரெண்ட்ஸ்

சரிதானே? ஆம் இயேசு கிறிஸ்து இந்த உலகத்துல பிறந்தது நமக்கு மட்டுமல்ல உலகத்துல வாழ்கிற எல்லாருக்குமே சந்தோஷம் தான். பின்ன என்னவாம் இயேசு நம்ம பாவத்தை போக்கி நமக்கு விடுதலை கொடுக்க அல்லவா இந்த உலகத்தில் பிறந்தார். So எல்லாருக்கும் நிச்சயமா மகிழ்ச்சிதான். வேதமும் இதைத்தான் சொல்லுகிறது.

***"இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்."***

ஃப்ரெண்ட்ஸ்! இப்படி உலகமே சந்தோஷப்படுகிற செய்தியைக் கேட்டு எல்லோரும் சந்தோஷப்பட்ட வேளையில் ஒரே ஒரு மனிதனும் அவனுடைய கூட்டாளிகளும் கலக்கத்தில் இருந்தார்கள் என்று வேதம் சொல்லுகிறது. அவரைப் பற்றிதான் இந்த மாதம் தியானிக்க போகிறோம். அவர் வேறு யாருமல்ல, யூதருக்கு ராஜாவாயிருந்த நம்ம ஏரோது அண்ணாச்சிதான்.

கிழக்கிலே நட்சத்திரத்தைக் கண்டு இயேசுவைக் காண வந்த வான சாஸ்திரிகள் ஏரோதுவின் அரண்மனைக்கு வந்து, யூதருக்கு ராஜாவாக பிறந்திருக்கிறவர் எங்கே? என்று கேள்வி கேட்டவுடனே நம்ம ஏரோது ராஜா ரொம்ப ஷாக் ஆயிட்டாரு. ஏன் தெரியுமா?

ஏன்? என்ற கேள்வியை மறுபடி மறுபடி எழுப்பி நன்கு தியானித்துப் பார்த்தோம் என்றால் ஏரோதுவின் கலக்கத்திற்கு காரணம் அவனது **சுயநலம்** என்று ஆணித்தரமாக சொல்லலாம். இதை தெளிவுபடுத்த ஏரோதுவின் வரலாற்று பிண்ணனியம் நமக்கு உதவி செய்கிறது.

ஏரோது ராஜாவைக் குறித்து வரலாறு சொல்லுகிற காரியம் என்னவென்றால் இவன் கி.மு. 37ம் ஆண்டு முதல் கி.பி. 4ம் ஆண்டு வரை யூதருக்கு ராஜாவாயிருந்தான் என்றும் மிகவும் சுயநலவாதி என்றும் கூறுகிறது. தான் மட்டும் ராஜாவாக இருக்க வேண்டும், அரியணையில் தான் மாத்திரம் வீற்றிருக்க வேண்டும் என்கிற எண்ணம் கொண்டவனாக இருந்தான். அதற்காக ரோமப் பேரரசின் கைப்பாவையாகவும் செயல்பட்டு ரோமப் பேரரசின் பாராட்டையும், வெகுமதிகளையும் பெற்றவன்.

இவனது சுயநலத்திற்கு வரலாறு சொல்லும் பெரிய சாட்சி என்னவென்று சொன்னால், தன்னைக் கொன்று விட்டு தன்னுடைய மகன் இராஜாவாகி விடக் கூடாது என்கிற பயத்தில் ஏரோது தனது மனைவிகளில் ஒருத்தியையும் அவளுக்கு பிறந்த தன்னுடைய மகன், அந்த மனைவியின் குடும்பத்திலுள்ள அத்தனை பேர்களையும் கொன்று போட்டான் என்று சரித்திரம் சொல்கிறது. என்ன பயங்கரம் பாருங்கள்! சுயநலத்திற்காக சொந்த மகனையே கொன்றவன் இந்த ஏரோது.

சாஸ்திரிகள் சாதாரணமாக ஒரு குழந்தை பிறந்திருக்கிறது என்று சொல்லியிருந்தால் சந்தோஷமாக சாஸ்திரிகளுக்கு விருந்து வைத்து அனுப்பியிருப்பான் என நான் நினைக்கிறேன். ஆனால் "யூதருக்கு ராஜாவாக பிறந்திருக்கிறவர் எங்கே?" என்ற கேள்வி அவனுக்குள் கலக்கத்தை ஏற்படுத்தியது. தனக்கு போட்டியாக ஒரு ராஜாவா? என்கிற பயம் அது. காரணம் அவனது சுயநலம்.

ஃப்ரெண்ட்ஸ்! இந்த சுயநலத்தின் விளைவு மகா பயங்கரம். அவனது எல்கையிலிருந்த இரண்டு வயதுக்குட்பட்ட எந்த பாவமும் செய்யாத ஆண் குழந்தைகளை கொடூரமாக கொலை செய்தான் சுயநலம் என்கிற கொடிய பிசாசின் விளைவு, உலகத்தின் இரட்சகராம், உலகத்தை படைத்த கடவுளாம் இயேசு கிறிஸ்துவின் பிறப்பை ஏரோதுவால் சந்தோஷமாக கொண்டாட முடியவில்லை. அந்த பாக்கியத்தை இழந்து போனான் என்றே சொல்லாம்.

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே! நம்முடைய வாழ்க்கையிலும் சுயநலம் மேலோங்கி நிற்குமானால், வாழ்க்கை என்ற அரியனையில் நான் மாத்திரம் தான் வீற்றிருப்பேன் என்கிற சுயநலம் இருக்குமானால், பிறர் நலனை மனதில் கொள்ளாமல், ஏழை எளியவர்களைக் குறித்து கவலை கொள்ளாமல் வாழ்ந்தோம் என்று சொன்னால், இந்த கிறிஸ்மஸ் பண்டிகை நமக்கு நிச்சயாக சந்தோஷத்தை தராது. மாறாக ஏரோது ராஜாவைப் போல கலக்கத்தை தான் ஏற்படுத்தும்.

So ஃப்ரெண்ட்ஸ் ஒரு தீர்மானம் பண்ணுவோம். தன்னலம் கருதாது பிறர் நலனையே கருத்தில் கொண்டு, இந்த உலகில் பிறந்த நமது இரட்சகரின் பிறந்த நாளை நினைவு கூறும் இந்த மகிழ்ச்சியான சூழ்நிலையில், நாம் மட்டும் சந்தோஷப்பட்டால் போதாது. நமக்கு அருகாமையில் இருக்கும் ஏழை எளியவர்களின் வாழ்க்கையிலும் சந்தோஷம் வேண்டும் என்கிற நோக்கத்தோடு நமக்குத் தெரிந்த, தேவையில் இருப்போருக்கு உதவி செய்து இந்த கிறிஸ்மஸ் பண்டிகையை கொண்டாடுவோம் ஆண்டவரின் ஆசீர்வாதத்தை பெறுவோம்.

சுயநலமற்ற கிறிஸ்மஸ், எல்லாருடைய வாழ்விலும் சந்தோஷம்!

***Wish you a Merry Christmas***

# தேவனோடு நடப்போம்...

தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர். (சங்.23:4)

புதிய ஆண்டில் புதிய காரியங்களைச் செய்கிற இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் புத்தாண்டு வாழ்த்துக்கள் !

கடந்த ஆண்டு முழுவதும் நம்மைப் பாதுகாத்த ஆண்டவர் ஒரு புதிய ஆண்டை காண்கிற கிருபையைத் தந்திருக்கிறார். ஆண்டவருக்கே மகிமை உண்டாவதாக.

புதிய ஆண்டுக்குள் பிரவேசிக்கும் போது தேவனிடமிருந்து ஒரு ஆசீர்வாத வாக்குறுதியைப் பெற்று, அந்த வாக்குறுதி தருகின்ற நம்பிக்கையில் வாழ்க்கை பயணத்தை தொடரலாம் என்பது நமது பொதுவான நம்பிக்கை, அநேகர் விரும்புகின்ற ஒன்று. ஆனால் வருட முடிவில் நம் வாழ்வில் நடந்த காரியங்களை பார்க்கும் போது பலருடைய வாழ்க்கையில் வருட தொடக்கத்தில் பெற்ற அந்த ஆசீர்வாத வாக்குறுதிகள் நிறைவேறுவதில்லை. பலருடைய வாழ்க்கையில் இந்த வாக்குத்தத்தங்கள் நன்மையான விளைவுகளைத் தருவதில்லை. காரணம் என்ன?

நாம் ஆண்டுதோறும் புதிய வாக்குத்தத்தங்களைப் பெற்று, அதனால் வருகின்ற நம்பிக்கையில் வாழ்க்கையை சந்திக்க விரும்புகின்றோம். இதை நான் தவறு என்று சொல்லவில்லை. ஆனால் ஒரு முக்கியமான காரியத்தில் நாம் தவறி விடுகின்றோம். தேவனிடமிருந்து வாக்குத்தத்தங்களை பெறுகின்ற நாம் அந்த தேவனோடு ஒரு சரியான நிலைவரமான உறவையும், ஐக்கியத்தையும் ஏற்படுத்திக் கொள்வதில் தவறி விடுகிறோம். இதுதான் நாம் செய்கிற பெரிய தவறு.

இஸ்ரவேல் ஜனங்களை கர்த்தர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து கானான் நோக்கி வழிநடத்தும் போது, மோசே வழியாக தேவன் அவர்களுக்கு அநேக ஆசீர்வாத வாக்குத்தத்தங்களைத் தந்தார். அவைகள் அவர்களுக்கு மிகுதியான நம்பிக்கையைத் தந்தன. ஆனாலும் அந்த நம்பிக்கை அவர்களுடைய வாழ்க்கையில் போதிய நன்மையான விளைவுகளை ஏற்படுத்தவில்லை. அவர்கள் பெற்ற அநேக ஆசீர்வாத வாக்குறுதிகள் அவர்களின் வாழ்வில் நிறைவேறவில்லை என்று கூட சொல்லலாம். காரணம் அவர்கள் வாக்குறுதியை பெற்ற போதிலும் தேவனோடு ஒரு வலிமையான உறவை வைத்துக் கொள்ள தவறினார்கள்.

தாவீது ராஜாவின் வாழ்க்கையை பார்க்கும் போது அவன் தேவனோடு வலிமையான ஒரு உறவையும், ஐக்கியத்தையும் வைத்துக் கொள்ள கவனமாயிருந்தான். அந்த ஐக்கியம் அவனுடைய வாழ்க்கையில் பெரிய நம்பிக்கையை கொடுத்தது. எனவே தான் '**மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும் நான் பயப்படேன், தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர்**' என்றான்.

So ஃப்ரெண்ட்ஸ், ஆண்டவரோடு கூட உறவில் பலப்படாமல், ஐக்கியத்தில் கவனம் செலுத்தாமல் வெறும் வாக்குத்தத்தத்தை மாத்திரம் வைத்துக் கொண்டு அந்த நம்பிக்கையில் வாழ்க்கையை சந்திக்க முயன்றால் அதிலே ஏமாந்து போவோம் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. தேவனோடு உள்ள உறவில் பலப்படுதல் மிக மிக முக்கியம்.

என்ன நண்பர்களே! இந்த சத்தியம் உங்களுக்கு பிரயோஜன மாயிருக்கும் என நம்புகிறேன். எல்லாரும் இந்த புதிய ஆண்டில் நல்ல வாக்குத்தத்தங்களை பெற்றிருப்போம். வாக்குத்தத்தத்தை வேதாகமத்தில் வைத்துக் கொண்டு அதைப் பார்த்து சந்தோஷப்படுவதொடு விட்டுவிடாமல் தேவனோடு உள்ள உறவில் பலப்படுவோம். அனுதின வாழ்வில் நாம் கர்த்தரோடு இருக்கிறோம் என்ற நிச்சயத்தை நாம் உணர முடிகிற அளவுக்கு நாள்தோறும் தேவ ஐக்கியத்தில் வளருவோம், தேவனோடு நடப்போம். அப்பொழுது அந்த தேவ ஐக்கியம் தரும் நம்பிக்கையே நமக்கு அநேக ஆசீர்வாதங்களைக் கொண்டு வரும். ஆண்டவர் தரும் வாக்குத்தத்தங்களும் நம்முடைய வாழ்வில் நிறைவேறும்.

சகோ. **S.S.J. மார்ட்டின்**

